[1982 பிப்ரவரி 10]

அம்பத்தூர் நகரிய பஜார் தெருவில் வடிகால் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 132—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி அம்பத்தூர் நகராட்சி நகரியம் பஜார் தெருவில் வடிகால் அமைக்கும் திட்டம் எப்போது நிறைவு பெறும் ?

(ஆ) இதற்குண்டாகும் செலவுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 1982 மே மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) ரூ. 7.03 இலட்சம்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபதாண்டுக் காலமாக அந்தப் பகுதியில் இருந்து வரும் பிரச்சினை இது. அந்தப் பணி வேகமாகத் துவக்கப்பட்ட போதிலும் கூட, இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான காரணத்தை ஆராய்ந்து வெகுவிரைவிலே முடித்துத் தருவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பணி 1982 மே மாதம் முடிவடைய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இடையிலே The work is held up now for want of Cement என்று இருக்கிறது. எனவே, சிமென்ட் கொடுக்க வேண்டிய மாண்புமிகு அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து கொடுப்பார்களேயானால் இந்தப் பணியை மே மாதத்திலே முடித்து விட முடியும்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேளை சிமென்ட் கிடைக்காததால் வேலை பாதியிலே நிறுத்தப்பட்டிருக்குமேயானால் அதை இருப்புக் குழாய்களைப் போடுவதாலோ அல்லது மாற்று வழியிலோ அந்தப் பணிகள் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாதியிலே நிறுத்தப்படவில்லை. இங்கேயிருக்கின்ற நோட்டின் பிரகாரம், The work is held up now for want of Cemen என்று இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் மே மாதத்திலே முடித்து விட வேண்டுமென்று இருக்கிறது. 10, 15, 20, 30 நாட்கள் வேண்டுமானால் அதிகமாகலாம். இப்பொழுது

சட்டமன்றத்தில் இது பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டிருப்பதை மனத்தில் இறுத்தி மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்களை அணுகுமாறு அதிகாரிகளிடம் சொல்கிறேன். சிமெண்டை விரை விலே பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்கிறேன்.

தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்படும் வைப்பு நிதி

*வினா எண் 133—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்களிடம் இருந்து பிடிக்கப்படும் வைப்பு நிதியில் தொழிலாளர்களின் பெண் குழந்தைகள் திருமணத்திற்கு கடன் கொடுக்கப்படுவது போல் ஆண் குழந்தைகள் திருமணத்திற்கும் கடன் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர்களுடைய வைப்பு நிதியில் இதுவரையில் தொழிலாளர்களின் பெண் குழந்தைகள் திருமணத்திற்கு மட்டும் கடன் கொடுக்கப்படுகிறது. அதை தொழிலாளர்களின் ஆண் குழந்தைகள் திருமணத்திற்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 9–2–80-லிருந்து ஆண்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று முடிவாகியிருக்கிறது. அதனால்தான் விடையிலே ‘ ஆம் ’ என்று சொன்னேன்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர்களின் ஆண் குழந்தைகளுக்கு திருமணம் செய்ய கடனுக்காக வைப்பு நிதி அலுவலகத்தில் லோன் கேட்டு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு விண்ணப் பித்தும்கூட திருமணம் முடிக்கப்படும் நேரம் வரையில் அந்த லோன் கிடைக்கப்படுவதில்லை ; அதற்குப் பிறகு பின்னால் கூட கிடைக்கப்படுவதில்லை. எனவே, தவிர்க்க முடியாத காரணத் தால் வேறு சில இடங்களில் கடனைப் பெற்றுத் திருமணத்தை முடித்து விடுகிறார்கள்.

(முற்பகல் 9–50)

அதிலே, பின்னர் கேட்டால்கூடக் கொடுக்கப்படுவதில்லை. எப்படி இருந்தாலும், அந்தத் திருமணக் கடன் கேட்டபிறகு, திருமணத்திற்கு முன்னால் கடன் கொடுக்க முடியாவிட்டாலும் திருமணம் முடிந்ததற்குப் பின்னாலாவது கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.